**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 56/2020 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW10 /PW- 11 | Village: |
| Name | : அழகர்சாமி, | Age : |
| மருத்துவர் | | Taluk : |
| Father's/Husband's Name | : | |
| | | Religion : |
| Nationality | : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11/08/2023**

சாட்சியை அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் திருமதி கவிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04/11/2019 ம் தேதி கும்பகோணம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது அன்றைய தினம் முற்பகல் 11.15 மணியளவில் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய முதல் நிலை காவலர் திருமதி மகேஸ்வரி எண்.2430 என்பவர் திருவிடைமருதூர், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களின் பரிந்துரை தபாலின் மூலம் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 16/2019 வழக்கில் தொடர்புடைய எதிரி ரகுபதி, த/பெ. சேகர் என்பவரை ஆண்மை

தன்மை பரிசோதனைக்காக ஆஜர் படுத்தினார். அன்றைய தினமே பரிசோதனையானது முற்பகல் 11.40 மணிக்கு மதியம் 02.00 மணிக்கு நிறைவு பெற்றது. அவரது உடலில் வலது முட்டியில் கருப்பு மச்சமும், நடு நெற்றி பகுதியில் ஒரு காய தழும்பும் இருந்ததை அங்க அடையாளமாக பதிவு செய்தேன். அவரது உடலை பரிசோதனை செய்தபோது அவரது வயதிற்கேற்ப உடல் உறுப்பபுகள் வளர்ச்சி அடைந்திருந்ததையும், இரண்டாம் நிலை பருவமடைந்த வளர்ச்சி இருந்ததையும் பதிவு செய்தேன். மேற்படி நபரின் இரத்த மற்றும் விந்து மாதிரிகள் பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்டது. பரிசோதனை முடிவில் அவரது விந்தனுக்கள் போதுமான நிலையில் இருந்தது. அவருக்கு உடன் நோய்கள் எதுவும் இல்லை. பரிசோதனை முடிந்து மேற்கண்ட நபர் ஆண்மை தன்மை இல்லை என்று சொல்லதக்க எந்த அறிகுறியும் இல்லை என்று சான்றளித்தேன். (**மேற்படி சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை** இல்லை

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**